மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற மாதிரி 3 கிலோமீட்டர் தொலைவு இருந்தாலும்கூட, அது கற்சாலையாக இருக்கிறது. அங்கே குறுகிய பாலமாக இருக்கின்ற காரணத்தாலே அங்கே பேருந்துகளை இயக்க முடியவில்லை என்று நான் குறிப்பிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மற்றொரு கருத்தையும் சொல்லி இருக்கிறார்கள். நாகூர் செல்லும் நகரப் பேருந்துகளை அந்த வழியாக இயக்க முடியுமா என்று கேட்டிருக்கிறார்கள். அரசு பரிசீலிக்கும்.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று அமைச்சர் அவர்கள் கூறியதற்கு நன்றி ஆனால் அதைப் பரிசீலிப்பதைவிட, எப்படியேனும் பேருந்தினை விடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்ய முயற்சிக்க வேண்டும் அங்கே ஒரு சின்ன கல்வர்ட் மட்டும்தான் போட வேண்டியிருக்கும். அதை ஊராட்சி ஒன்றியத்தின் மூலமாகச் செய்யலாம் அல்லது ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டத்தின்கீழ் மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சரவர்கள் முயற்சி செய்து அந்தக் கல்வர்ட்டைக் கட்ட ஏற்பாடு செய்தால், அந்த மக்களுடைய பிரச்சினை தீருவதற்கு மிகவும் உதவியாக இருக்கும். அந்த வகையிலே பேருந்தை விடுவதற்கு அமைச்சரவர்கள் துரித நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பரிசீலிக்கும் என்று சொன்னால் மட்டும் போதாது என்று சொன்னார்கள். பறக்கும் பஸ் என்னிடத்தில் இல்லை. இருந்தால், பரிசீலிக்க முடியாது, உடனடியாக விடுகிறேன் என்று கூடச் சொல்லலாம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுக்கு ஒரு கேள்வியைப் போட்டு, கல்வர்ட்டை விரிவுபடுத்தினால், உடனடியாக, அடுத்த நாளே வேண்டுமானாலும் பேருந்தை இயக்குவதற்கு அரசு தயாராக இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 184, டாக்டர் க. கோபால், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

184-

நன்னிலத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடுதல்.

**21593-டாக்டர் க. கோபால்:*

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா--

1994 ஏப்ரல் 5]

(அ) நன்னிலத்திலிருந்து சென்னைக்கு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து விடும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) இல்லை.

டாக்டர் க. கோபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைநகரிலிருந்து திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து வராத ஒரே தொகுதி நன்னிலம் தொகுதியாகும். இதற்கு முன்னர், சுமார் 7 ஆண்டுகளுக்கு முன்பு திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்து நன்னிலத்திலிருந்து 2 மாதங்களுக்கு விட்டு, பின்னர் நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. சட்டமன்ற உறுப்பினராகிய நானும் மற்ற வணிகர்களும் சென்னைக்கு வரவேண்டும் என்றால் கும்பகோணம் அல்லது மயிலாடுதுறை சென்றுதான் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்தில் போகின்ற சூழ்நிலை இருக்கிறது. அதைப் போக்கும் வண்ணம், இந்த வருடம் இல்லாவிட்டாலும், வருகின்ற ஆண்டிலாவது ஒரு தனிப் பேருந்தை விடுவதற்கு ஏற்பாடு செய்யப்படுமா என்று அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நன்னிலத்திலிருந்து சென்னைக்குப் பேருந்துகளை இயக்குவதற்கான சாத்தியக்கூறுகள் இப்போது இல்லை. நன்னிலத்திலிருந்து 4 கிலோமீட்டர் தொலைவில் இருந்து, பக்கத்திலிருந்து அந்தப் பேருந்துகளை இயக்குகின்ற காரணத்தாலே சாத்தியக்கூறுகள் இல்லை என்று நான் குறிப்பிட்டிருக்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாற்று வழி ஏதாவது சொல்வார்களானால் திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகம் அதைப் பரிசீலிக்கும்.*

முற்பகல் 10-20

டாக்டர் க. கோபால்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது நாகையிலிருந்து நன்னிலம் வழியாகப் போகாமல் மயிலாடுதுறையிலிருந்து சென்னைக்கு பேருந்துகள் சென்று கொண்டிருக்கின்றன. நன்னிலம் என்பது மயிலாடுதுறை-முத்துப்பேட்டை மார்க்கத்தில் சன்னாநல்லூரிலிருந்து 5 கிலோ மீட்டர் தூரத்தில் உட்கிராமத்தில் அமைந்திருப்பதாலும், அந்த சன்னாநல்லூரிலிருந்து நன்னிலத்திற்குச் செல்வதற்குப் போதிய பேருந்து வசதி இல்லாத காரணத்தாலும் நாகையிலிருந்து செல்கிற அந்த*

திருவள்ளுவர் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளை நன்னிலம் வழியாக விட்டு அதை கும்பகோணத்திலிருந்து இயக்குவதற்கு ஆவன செய்யப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு பரிசீலிக்கும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 185, திருமதி கே. மரியம் உல் ஆசியா, இருக்கையில் இல்லை.

வினா எண் 186, திருமதி அ. தி. சரஸ்வதி, மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர்.

186–

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் அணை கட்டுதல்

***9219-திருமதி அ. தி. சரஸ்வதி:**

மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் மலைப்பகுதியில் இக்கலூர் கிராமத்தில் ஒழக்கரை என்னும் இடத்தில் அணை கட்ட அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன், பொதுப்பணித்துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஒழக்கரை என்ற இடத்தில் அணை கட்டும் திட்டம் எதுவுமில்லை என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திருமதி அ. தி. சரஸ்வதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இல்லையென்ற பதிலைச் சொன்னாலும், மீண்டும் எனது கேள்வியை மறுபரிசீலனை செய்வார்கள் என்று நம்பிக் கேட்டுக்கொண்டு நான் உங்கள்முன் இந்தக் கோரிக்கையை வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். தாளவாடி வட்டாரத்தின் மொத்தப் பரப்பளவு 490 சதுர கிலோமீட்டர். இதில் நான்கில் ஒரு பங்கு சமவெளிப் பகுதியாகும். இவ்வட்டாரம் 10 ஊராட்சிகளைக் கொண்டதாகும். மொத்தம் 50 ஆயிரத்திற்கு மேற்பட்ட மக்கள் வசிக்கின்றார்கள். காலங்காலமாக வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழ்கிறார்கள். மலைவாழ்மக்கள், ஆதிதிராவிடர், பழங்குடி இனத்தவர்கள், ஏழை விவசாயிகள், மிகவும் தொழில் வளம் இல்லாமல் பாதிக்கப்பட்ட மக்கள் கூலி வேலை செய்துகொண்டு வாழ்ந்துகொண்டிருக்கிறார்கள். இங்கு பெரும்பாலும் ராகி, கம்பு போன்ற பயிர்களைச் செய்துகொண்டு வாழ்கிறார்கள். மற்றும் தாளவாடி